*1*

## *திறவுகோல் வசனம்: லூக்கா 22:19*

# கர்த்தருடைய இராப்போஜனத்தின் அர்த்தம் (1)

*எனது குடும்பத்தார் ஆராதிக்கச் சென்ற சபைக்குழுமத்தில் கர்த்தருடைய இராப்போஜனம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. எனது தாயார் அதில் புசித்து பானம் பண்ணுவதை நான் கவனித்தது என் நினைவுக்கு வருகிறது. அந்த வேளையில் எனது தந்தை அதில் பங்கேற்கவில்லை, ஏனெனில் அவர் ஞானஸ்நானம் பெற்றிருக்கவில்லை. அப்பமும் திராட்சரசமும் தரப்படும் வேளையில், நான் எனது தாயாரைக் கவனித்துப் பார்த்துக்கொண்டு, "நீங்கள் உண்பது என்ன? நீங்கள் அதை உண்பது ஏன்? அப்பா இதை உண்ணாதிருப்பது ஏன்? நான் அதை உண்ணக் கூடாதிருப்பது ஏன்? நீங்கள் பானம் பண்ணுவது என்ன? அதில் நானும் பங்கேற்க முடிவது எப்போது?" என்பவற்றைப் போன்ற கேள்விகளைக் கேட்டேன்.*

*எனது தாயார் மென்மையாக, "ஷ்ஷ் ... நாம் வீட்டுக்குச் சென்றபின்பு உனக்குப் பதில் கூறுவேன்" என்று கூறுவார்கள்.*

*வயது வந்தவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்றதை நான் கண்டபோது, பயபக்தியானதென்று நான் உணரக்காரணமான ஒருவகையான பயம் கலந்த மரியாதை உணர்வு அவர்களை உற்றுநோக்குகையில் எனக்கு ஏற்பட்டது. அவர்கள் ஜாக்கிரதையாகவும் பரிசுத்த உணர்வுடனும் அப்பத்திலும் பாத்திரத்திலும் பங்கேற்றபோது, தங்கள் தலைகளைத் தாழ்த்தி, தங்கள் கண்களை மூடி, தியானித்தனர். அவர்கள் சிந்தனையிலும் தியானத்திலும் தீவிரமாக ஈடுபட்டதாகத் தோன்றியது.*

*இந்த நிகழ்வின் பரிசுத்த தன்மையினிமித்தம், நான் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கக் கூடும் வேளையை நான் ஆவலுடன் எதிர் நோக்கியிருந்தேன். அதன் நோக்கத்தையும் அர்த்தத்தையும் கற்றுக்கொள்ள நான் விரும்பினேன்.*

*நான் வயதுவந்த நிலையில் இருக்கும் இவ்வேளையில், இராப்போஜனம் மற்றும் அதன் நோக்கம் மற்றும் தனிச்சிறப்பு ஆகியவற்றைப் பற்றிய வேதாகம போதனைகளை ஆய்வு செய்யும் வாய்ப்பையும் நேரத்தையும் கொண்டிருந்துள்ளேன்.*

## நாம் கிறிஸ்துவை நினைவுகூருகிறோம்

*கிறிஸ்தவம் முழுமையும் உள்ளது போன்றே கர்த்தருடைய இராப்போஜனம் இயேசுவையும் அவரது சிலுவை மரணத்தையும் சுற்றிக் கட்டி எழுப்பப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 2:1, 2). பவுல் பின்வருமாறு எழுதினார்:*

> நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து ... (1 கொரிந்தியர் 15:3, 4).

கிறிஸ்தவர்கள் இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் மறுவருகை ஆகியவற்றை நினைவுகூர உதவும் வகையில் இராப்போஜனத்தை ஒரு நினைவுகூருதலாக இயேசு கொடுத்தார். இதைப் பற்றி நாம் அடிக்கடி நினைவுபடுத்தப்பட வேண்டியது அவசியமாக உள்ளது, ஏனெனில் இவற்றின் மீதே விசுவாசம் அடித்தளம் இடப்பட்டுள்ளது. இவைகள் கிறிஸ்தவ வாழ்விற்கு அர்த்தம் தருகின்றன.

இயேசுவின் தியாகத்தின் மூலமாக நாம் பாவங்களில் இருந்து சுத்திகரிக்கப் பட்டுள்ளோம் (வெளிப்படுத்தின விசேஷம் 1:5) மற்றும் அவருடன் பரலோகத்தில் நித்திய ஜீவனைப் பெறுவோம் என்ற நம்பிக்கை கொண்டுள்ளோம் (1 கொரிந்தியர் 15:22-24; 1 பேதுரு 1:3, 4). அவரது உயிர்த்தெழுதல் மூலமாக நாம் உயிர்த்து எழுதல் நிச்சயம் என்ற நம்பிக்கையை நாம் பெற்றுள்ளோம் (1 கொரிந்தியர் 15:14, 17). இராப்போஜனத்தில் நாம் இந்த சத்தியங்களைத் தியானிக்கிறோம்.

இயேசுவின் தியாகமானது, பஸ்கா ஆட்டுக்குட்டி மற்றும் இஸ்ரவேல் மக்களின் பாவநிவாரண பலி ஆகியவற்றில் முன்னுருவகப்படுத்தப்பட்டு உள்ளது (1 கொரிந்தியர் 5:7; எபிரெயர் 10:1). ஆட்டுக்குட்டி என்ற வகையில் அவர் தமது இரத்தம் சிந்துதலினால் மனிதகுலம் முழுமைக்கும் பாவமன்னிப்பைச் சாத்தியமாக்கினார், எனெனில் இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை (எபிரெயர் 9:22).

ஏசாயாவின் தீர்க்கதரிசனம், பூமிக்கு வந்து நமது பாவங்களுக்காக பலியான, பாடுபடும் நமது இரட்சகரை நாடகத்துவமாகச் சித்தரிக்கிறது:

> நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் (53:5).

> அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம் ... (53:12).

கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடித்தல் மூலம் இயேசுவின் மரணம் அறிவிக்கப்படுகிறது. இந்த இராப்போஜனத்தில் பங்கேற்பவர்கள் என்ற வகையில் நாம், அவரது சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துத் தியானிக்கிறோம். உயிர்த்தெழுந்த நமது கர்த்தர் மரணத்தை வெற்றிகொண்டு இப்போது பரலோகத்தில் வாழ்கிறார் என்பதை உணர்ந்தறிந்த நிலையில் நாம், நமது பாவங்களுக்காக இயேசு செய்த தியாகம் மற்றும் அவர் அடைந்த மரணம் ஆகியவற்றிற்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.